திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இவ்வளவு மோசமான சாமான்கள் எல்லாம் வந்திருக்கிறதே, அதை சப்ளை செய்தது யார்? எதன் அடிப்படையில் வாங்கப்பட்டது? இந்த ஊழல் செய்தவர்களை அல்லது அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் ஏற்கனவே சொன்னதுபோல், இந்தப் பொருள் தற்சமயம் காவல் புலனாய்வு துறையின் ஆய்வில் உள்ளது. இது நடந்ததெல்லாம் 1972, 1973, 1974-ஆம் ஆண்டுகளில். யார் காலத்தில் இப்படி நடந்தது, யார் பொறுப்பாளி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஊகித்துக் கொள்ளலாம்.

திரு. மு. அம்பிகாபதி: இந்தக் குடிநீர் திட்டங்களே கோளாறான திட்டங்களாக இருக்கின்றன. வீராணம் திட்டம் கோளாறு, பாலாறு திட்டம் கோளாறு, ஆக எல்லாம் கோளாறாக இருக்கின்றன. ஆகவே இந்தக் கோளாறுகளை நீக்கி கோளாறு இல்லாமல் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எத்தகைய நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கோளாறு இருந்த காரணத்தால்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறோம். எனவே நாங்கள் இப்போது கோளாறு இல்லாமல் செய்து கொண்டிருக்கிறோம்.

வால்பாறையில் தொழிலாளர் ஓய்வு விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண். 1000—திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் தொழிலாளர் ஓய்வு விடுதி கட்டுவதற்காக தொழிலாளர்கள் நல வாரியம் திட்டமிட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் வால்பாறையில் தொழிலாளர்களுக்காக ஓய்வு விடுதி கட்ட தீர்மானித்துள்ளது. அதற்காக நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

(ஆ) விடுதி கட்டுவதற்காக இடம் கிடைத்ததும், அதற்கான வரைபடம் மற்றும் மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு, பின்னர் கட்டிட வேலை துவக்கப்படும்.

1981 மே 6]

[முற்பகல் 9—30]

திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறைப் பகுதியில் தொழிலாளர் நல வாரியம் மூலமாக தோட்டத் தொழிலாளர்கள் ஓய்வு இல்லம் கட்ட வேண்டுமென்பது என்னுடைய கேள்வி, காரணம் தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய எல்லா மாவட்டங்களிலும் இருந்து அந்தப் பகுதியிலே தொழிலாளர்கள் 200 ஆண்டுகளாக குடியேறி, அங்கே தோட்டத் தொழிலாளர்கள் ஜீவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கு இடம் கிடையாது; ஓய்வு இல்லம் கிடையாது...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓய்வு விடுதி கட்ட வேண்டுமென்று கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிலாளர்களுக்கு ஓய்வு இல்லம் கட்டுவது தொழிலாளர் நல அரசின் கடமை என்று நான் கருதுகின்ற காரணத்தினால், வெகு வேகமாக இடத்தை அக்குவயர் பண்ணி அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து, அந்தத் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் ஓய்வு விடுதி கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி தொழிலாளர் நல வாரியம் திட்டம் பற்றியது என்றாலும், தொழிலாளர் நல வாரியத்திற்கு யார்யார் சந்தா தருகிறார்களோ, ஆண்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்ற அளவில் தருகிறார்களோ அவர்கள் பலன் பெறுவதற்காக கட்டுவதாக உள்ளது. ஒரு ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யும்படி கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்கப்பட்டுள்ளது. இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமிருந்து தகவல் வந்தவுடன் அதற்கான வரைபடமும், மதிப்பீடும், தயாரிக்கப்பட்டு, பின்னர் கட்டிட வேலை துவங்கப்படும்.

திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே வேலை செய்து கொண்டிருக்கக் கூடிய தோட்டத் தொழிலாளர்கள் ஊதியத்திலே இருந்து மாதா மாதம் ஒரு ரூபாய் அந்த தோட்ட முதலாளிகளால் பிடிக்கப்பட்டு, தொழிலாளர் நல வாரியத்திற்கு அனுப்பப்படுவதாக நான் அறிகிறேன். அந்தப் பணத்தில் தொழிலாளர் ஓய்வு இல்லம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

[1981 மே 6

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வாரியத்தில் சட்டப்பிரகாரம் மாதா மாதம் ஒரு ரூபாய் கட்ட வேண்டியதில்லை. ஒரு தொழிலாளர் ஆண்டு ஒன்றுக்கு ஒரு ரூபாயும், முதலாளிகள் ஒரு தொழிலாளருக்கு 2 ரூபாய் என்றும் தருகிறார்கள். மாதாமாதம் என்பது சரியல்ல. மாதா மாதம் வாங்கப்படுவதாக உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், அப்படி அந்தப் பணம் வாங்கக்கூடாது என்று உத்தரவிடுகிறேன். சட்டப்படி ஆண்டு ஒன்றுக்கு ஒரு தொழிலாளர் ஒரு ரூபாய் கட்ட வேண்டும். சட்டம் அப்படித்தான் இருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் இப்படிப்பட்ட ஓய்வு விடுதிகள். திருமண மண்டபங்கள், இன்னும் அது போன்ற பல நல்ல ஏற்பாடுகளை தொழிலாளர்களுக்குச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தால் அந்த நடவடிக்கை துரிதமாக, விரைவில் நிறைவேற்று கின்ற நிலை இல்லையென்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அந்த நிலையை மாற்றி, அவர்களிடம் சந்தா வசூலித்து, அரசும் பணம் போட்டு, அதைக் கட்டுவதற்கு துரிதமான ஏற்பாட்டைச் செய்வதற்கு என்ன ஏற்பாடுகள் செய்வர்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல் படி துரிதமாக வேலை நடப்பதாகத் தெரிகிறது. கலெக்டர் அவர்களிடமிருந்து நிலம் வருவதிலே தாமதம் இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தில் காலதாமதம் ஆகிறது, எவ்வளவு காலதாமதம் ஆகிறது என்ற குறிப்பைச் சொல்வர்களானால், அதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சத்யமேவ ஜயதே / வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பத்திரிகை ஊழியர்களுக்கான மூன்றாவது ஊதிய கமிஷன் சிபாரிசுகளை அமல்படுத்துதல்.

*வினா எண். 1001—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரிக்கை ஊழியர்களுக்காக அமைக்கப்பட்ட மூன்றாவது ஊதியக் கமிஷன் சிபாரிசுகளை தமிழகத்தில் எந்தெந்த பத்திரிக்கைகள் அமுல்புடுத்தி இருக்கின்றன?

(ஆ) முரசொலி பத்திரிக்கை அமுல்படுத்தி இருக்கிறதா?

(இ) ஆம் எனில், பயன்பெற்ற நிருபர்கள், உதவி ஆசிரியர்கள் யார்? யார்?